Name of the Newspaper: DINA MALAR Date: 5-1-18

# மெட்ரோ ரயில் 2வது திட்டம் பாதை ஆய்வு பணி துவங்கியது

சென்னை, ஜன. 5-

மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டத்திற்கு, பாதைக்கான நில ஆய்வு பணி துவங்கியது.

சென்னையில், மெட்ரோ ரயில் திட்டத்தில், 45 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இதில், சென்னை விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, நேரு பூங்கா வரையும்; விமான நிலையத்தில் இருந்து, சின்னமலை வரையும் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

நேரு பூங்கா – சென்ட்ரல், சின்னமலை – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரை, வரும் மார்ச்சில், மெட்ரோ ரயில் இயக்கப்பட உள்ளது. முழு திட்டத்திலும் பாதை அமைக்கும் பணி முடிந்து, வரும் டிசம்பரில், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்கப்பட உள்ளது.

மெட்ரோ ரயில் பாதை நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் வரை பாதை பணி முடிந்து, 2019 டிசம்பரில், ரயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## இரண்டாவது திட்டம்

மெட்ரோ ரயில் பாதை, இரண்டாவது திட்டத்தில், மாதவரம் – சிறுசேரி, மாதவரம் – சோழிங்கநல்லுார், கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 107 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை, 85 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அமைக்க, தமிழக அரசு கொள்கை ரீதியாக ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கு மத்திய அரசு ஒப்புதல், நிதியுதவி, ஜப்பான் நாட்டு பன்னாட்டு கூட்டுறவு முகமையால் கடன் வசதி பெறவும், மத்திய நகர்ப்புற அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த மூன்று பாதைகளிலும், 104 நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

## ஆய்வு பணி துவக்கம்

இம்மூன்று பாதைகளுக்கும் தேவையான இட வசதிகள் குறித்து, ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிக்க, மெட்ரோ ரயில் நிர்வாகத்தால், தனியார் ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாதைகளுக்கு, அரசுக்கு சொந்தமான நிலங்கள், தனியாரிடம் கையகப்படுத்த வேண்டிய நிலங்கள் குறித்த ஆய்வு பணி துவங்கப்பட்டுள்ளது.

கோயம்பேடு – கலங்கரை விளக்கம் வரையான பாதைக்கு, தேவையான நிலம் குறித்து, மூன்று குழுக்கள் ஆய்வு பணியை மேற்கொண்டுள்ளது. நேற்று முன்தினம், ஆழ்வார்பேட்டை லஸ் சர்ச் சாலை, சி.வி.ராமன் சாலையையொட்டியுள்ள பகுதிகளில் ஆய்வு செய்தனர்.

அங்கு, சாலையின் மையப்பகுதியில் துாண்கள் அமைத்து, அதன் மீது பாதை அமைப்பதற்கான வடிவமைப்பு அந்த இடத்திற்கு உகந்ததாக இருக்குமா என, ஆய்வு செய்தனர்.

மற்ற இரண்டு குழுவினர், மாதவரம் – சிறுசேரி, மாதவரம் – சோழிங்கநல்லுார் இடையேயும் ஆய்வு பணியை துவங்கியுள்ளனர்.

இப்பணி, மார்ச் இரண்டாவது வாரத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**இரண்டாவது திட்டத்திற்கு, வரும் மார்ச்சுக்குள் ஒப்புதல் கிடைத்துவிடும் என, எதிர்பார்க்கிறோம். தனியார் நிலங்களை குறைந்தளவே கையகப்படுத்தும் வகையில், திட்டமிடப்பட்டுள்ளது. இப்பாதைகள், தரைக்கு மேலும், சுரங்கத்திலும் அமைக்கப்பட உள்ளன. பாதை அமைக்க மண்ணின் உறுதித்தன்மை குறித்து, நவீன கருவியால் ஆய்வு செய்யப்படும். ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகே, எந்தெந்த இடங்களில், சுரங்கத்தில் பாதை அமைக்க வேண்டும் என்பது குறித்து, இறுதி முடிவு எடுக்கப்படும்.**

**மெட்ரோ ரயில் அதிகாரி**